செ.வெ.எண்.236 நாள்: 22.10.2017

**மதுரை மாநகராட்சி பகுதிகளில் கீழ்நிலை குடிநீர் இணைப்பு தொட்டி (PIT TAP) வைத்துள்ளவர்கள் தண்ணீர் தேங்காதவாறு சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் ஆணையாளர் மரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

மதுரை மாநகராட்சி பகுதிகளில் மாநகராட்சியின் மூலம் குடிநீர் இணைப்பு பெற்று கீழ் நிலை குடிநீர் இணைப்பு தொட்டிகள் (PIT TAP) அமைத்து குடிநீர் பிடிக்கும் பொதுமக்கள் குடிநீர் கீழ்நிலை தொட்டிகளை தண்ணீர் தேங்காதவாறு சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். பெரும்பாலான பகுதிகளில் கீழ்நிலை குடிநீர் தொட்டிகள் உள்ள வீடுகளில்தான் டெங்கு கொசு புழு உற்பத்தியாவது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே கீழ்நிலை குடிநீர் இணைப்பு தொட்டி வைத்துள்ள பொதுமக்கள் தொட்டிகளில் தண்ணீர் தேங்காதவாறு மணல் நிரப்பியும் அல்லது சிமெண்ட் தளம் அமைத்திருந்தால் அதனை உடைத்து விட்டு தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ளுமாறும் மாநகராட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ளப் படுகிறது. மாநகராட்சி பணியாளர்கள் வீடு வீடாக டெங்கு ஆய்வு பணியில் ஈடுபடும்போது தங்கள் வீடுகளில் கீழ்நிலை குடிநீர் தொட்டியின் தரையில் சிமெண்ட் பூசியிருந்தால் உடனடியாக சிமெண்ட் தளத்தை உடைத்து தண்ணீர் தேங்காதவாறு நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

எனவே பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கீழ்நிலை குடிநீர் இணைப்பு தொட்டிகளில் தண்ணீர் தேங்காதவாறு சுத்தமாக வைத்துக் கொள்வதுடன் மாநகராட்சி பணியாளர்களின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு தருமாறு ஆணையாளர் மரு.அனீஷ் சேகர், இ.ஆ.ப. அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு: செ.ம.தொ.அ மதுரை மாநகராட்சி